**எண்: 5/5/1/8/பதிவாளர்/கைத்தறி/பி4/2014/VOL-III/ 329.**

**புதுவை அரசு**

**கூட்டுறவுத் துறை**

❁❁❁

புதுச்சேரி, தேதி: 28.05.2024.

**சுற்றறிக்கை**

***

**பொருள்:** கைத்தறித் தொழிற் நுட்ப மூன்று ஆண்டுகளுக்கான பயிற்சிக்குப் பயிலிகள் தேர்ந்தெடுத்தல் - தொடர்பாக.

******

கைத்தறி தொழில் நுணுக்கங்களைப்பற்றி பயிற்றுவிப்பதற்காக தமிழ்நாடு சேலம், ஆந்திர மாநிலம் வெங்கடகிரி கர்நாடக மாநிலம் கடாக் மற்றும் கேரளாவில் உள்ள கண்ணூரில் கைத்தறி தொழில் நுட்ப பயிற்சி நிலையங்களில் **16.07.2024** முதல் மூன்று ஆண்டு பட்டயப்பயிற்சி (டிப்ளமோ) தொடங்கப்பட உள்ளது. இப்பட்டயப்பயிற்சியில் சேர விரும்பும் தகுதி பெற்ற மாணவர்கள் புதுவை தட்டாஞ்சாவடி ஸ்ரீ வேதபுரீஸ்வரர் வரதராஜப் பெருமாள் நகரில் உள்ள **கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்** அலுவலகத்தில், அலுவலக நேரத்தில் விண்ணப்பப்படிவம் பெற்றுக் கொள்ளலாம். **பூர்த்தி செய்த விண்ணப்ப படிவங்களை தக்க சான்றுகளுடன் 01.07.2024-க்குள் மேற்படி அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.** சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களிலிருந்து தகுதி வாய்ந்த மாணவர்கள் ஆறு பேர் அதாவது சேலம் பயிற்சி நிலையத்திற்கு மூன்று பேரும் வெங்கடகிரி பயிற்சி நிலையத்திற்கு ஒருவரும் மற்றும் கடாக் பயிற்சி நிலையத்திற்கு இரண்டு பேரும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தேர்ந்தெடுக்கப்படும் பயிலிகள் ஒவ்வொருவருக்கும் பயிற்சி காலத்தின் போது மூன்று ஆண்டிற்கு ஒவ்வொரு மாதமும ரூ. 2500/- உதவித் தொகை வழங்கப்படும்.

1. குறைந்தபட்சம் பத்தாம் வகுப்பு அல்லது அதற்கு சமமான வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

2. மேற்படி வகுப்பில் ஒரே அமர்கையில் தேர்வு பெற்றிருப்பதுடன், குறைந்தபட்சமாக சராசரி மதிப்பெண்கள் 45 விழுக்காடு பெற்றிருக்க வேண்டும். மேலும், ஆங்கிலத்தை ஒரு பாடமாக பயின்றிருப்பதுடன், கணிதம் மற்றும் அறிவியல் ஆகிய இரு பாடங்களிலும் சராசரி மதிப்பெண்கள் 50 விழுக்காடு பெற்றிருக்க வேண்டும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தவர்கள் சராசரி மதிப்பெண்கள் 40 விழுக்காடும், கணிதம் மற்றும் அறிவியல் பாடத்தில் சராசரி மதிப்பெண்கள் 45 விழுக்காடும் பெற்றிருத்தல் வேண்டும்.

OFFICE OF THE REGISTRAR OF CO-OPERATIVE SOCIETIES ★ PUDUCHERRY

..2/..

3. 01.07.2024 அன்று 15 முதல் 23 வயது உடையவராக இருக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பினர்கள் 15 முதல் 25 வயது வரை இருக்கலாம்.

4. நெசவுத் தொழிலை பாரம்பரியமாக கொண்ட குடும்பத்தை சார்ந்தவர்களுக்கும், நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள குடும்பத்தினரைச் சார்ந்தவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

5. புதுவை மாநிலத்தில் பிறந்தவராகவோ அல்லது ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து புதுவை மாநிலத்தில் வசிப்பவராகவோ இருக்க வேண்டும்.

OFFICE OF THE REGISTRAR OF CO-OPERATIVE SOCIETIES PUDUCHERRY

(P. ராமசந்தரய்யா)
துணைப்பதிவாளர் (கைத்தறி)

**பெறுநர்,**

1. திரு. நிர்வாகி, புதுவை மாநில கூட்டுறவு ஒன்றியம், புதுச்சேரி.
2. திரு. தலைவர்/ நிர்வாகி அனைத்து தலைமை மற்றும் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், புதுச்சேரி/ மாஹே.

(1–2) இதன் நகலை தகவல் பலகையில் ஒட்டி விளம்பரப்படுத்துமாறும் தகுதியுள்ளவர்கள் விண்ணப்பிக்க உதவுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

3. திரு. வேலைவாய்ப்பு அதிகாரி/ வேலைவாய்ப்பு அலுவலகம், புதுச்சேரி. -- தகவலுக்கும் தக்க நடவடிக்கைக்கும்

4. திரு.கூட்டுறவு துணைப்பதிவாளர் காரைக்கால்/ மாஹே.
5. திரு. கூட்டுறவு அதிகாரி, ஏனாம்.

(4–5) இத்துடன் சேலம் பயிற்சி நிலையத்தின் 03.04.2024 தேதியிட்ட கடிதம் மற்றும் விண்ணப்ப படிவம் இணைக்கப்பட்டுள்ளது. விருப்பமுள்ளவர்களுக்கு அதன் நகலை அளிக்கும்படியும் அவர்களிடமிருந்து பெற்ற விண்ணப்பபடிவங்களை குறிப்பிட்ட படி 01.07.2024-க்குள் துணைப்பதிவாளர் (கைத்தறி)-க்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது. **01.07.2024**-குள் வந்து சேராத விண்ணப்பங்கள் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

6. முதுநிலை கணக்கு அதிகாரி, கூட்டுறவுத்துறை, புதுச்சேரி.
7. துணைப்பதிவாளர் (திட்டம்), கூட்டுறவுத்துறை, புதுச்சேரி

(6–7) தகவலுக்காக.

8. தகவல் பலகை/ வலைபக்கம், கூட்டுறவுத் துறை, புதுச்சேரி.
9. இருப்பு கோப்பு.